**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை – 600 006.**

**<u>ந.க.எண்.34087/சி2/இ2/2022, நாள் 01.07.2022</u>**

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் – 2022-23-ம் கல்வியாண்டில் காலியாகவுள்ள இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பணியிடங்களை தற்காலிகமாக நிரப்புதல் – முன்னேற்பாடு நடவடிக்கை மேற்கொள்ள – அறிவுரைகள் வழங்கியது – கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டு முறைகள் (Guide lines) – சென்னை உயர்நீதிமன்ற இடைக்கால ஆணையின் அடிப்படையில் திருத்திய வழிகாட்டு முறைகள் – தெரிவித்தல் – சார்பு. |
| பார்வை | 1) அரசாணை (நிலை) எண்.12, பள்ளிக் கல்வித் (தொ.க.1(1)) துறை நாள் 30.01.2020.<br>2) அரசாணை (நிலை) எண்.13, பள்ளிக் கல்வித் (ப.க.3(1)) துறை நாள் 30.01.2020.<br>3) அரசாணை (நிலை) எண்.14, பள்ளிக் கல்வித் (ப.க.2(1)) துறை நாள் 30.01.2020.<br>4) தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்.34087/சி2/இ2 /2022, நாள் 23.06.2022. மற்றும் 30.06.2022<br>5) சென்னை, உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P.No.16704/2022.-ன் மீதான இடைக்கால ஆணை நாள்.01.07.2022.<br>6) சென்னை உயர்நீதிமன்றம் (மதுரை அமர்வு) வழக்கு எண் WP(MD)No.13751/2022. |

.....

பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும், ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-23-ம் கல்வியாண்டில் காலியாகவுள்ள இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் தற்காலிக ஆசிரியர் நியமனம் சார்பாக மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கை குறித்து பார்வை 4-ல் கண்டுள்ள 30.06.2022 நாளிட்ட செயல்முறைகளில் வழங்கப்பட்ட வழிகாட்டு முறைகளின் தொடர்ச்சியாக பார்வை 5-ல் கண்டுள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற இடைக்கால ஆணையின் அடிப்படையில் கீழ்க்காணும் திருத்திய வழிகாட்டு முறைகள் (Revised Guide lines) வழங்கப்படுகிறது.

1. **காலிப்பணியிடங்கள் :** 01.06.2022 தேதியில் தொடக்கக் கல்வி / பள்ளிக் கல்வி துறையின் கீழ் வரும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க / நடுநிலை / உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட வேண்டும்.

2. **விண்ணப்பிக்கும் முறை :** விண்ணப்பதாரர்களிடமிருந்து எழுத்து மூலமான விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் வாயிலாகவோ உரிய கல்வித் தகுதி சான்றுகளுடன் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்சொன்னவாறு மாவட்டக் கல்வி அலுவலர் பெறும் விண்ணப்பங்களை, விண்ணப்பதாரர் தற்காலிக நியமனம் கோரும் பள்ளித் தலைமையாசிரியருக்கு அனுப்பி வைக்கவேண்டும். பள்ளித் தலைமையாசியர் பின்வரும் பத்தி 6-ல் தெரிவித்துள்ள அறிவுரைகளை பின்பற்றி செயல்பட வேண்டும்.

**கால அட்டவணை**

| | | |
|---|---|---|
| i. | காலிப்பணியிடங்கள் விளம்புகை (பள்ளி வாரியான அனைத்து காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்களையும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலக அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும், மாவட்ட அளவில் செய்திக் குறிப்பு வெளியிட வேண்டும்). | 02.07.2022 |
| ii. | விண்ணப்பதாரர்கள் மாவட்டக் கல்வி அலுவலர் / வட்டாரக் கல்வி அலுவலரிடம் விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள் | 04.07.2022 முதல் 06.07.2022 மாலை 5 மணிக்குள் |
| iii | பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் கல்விச் சான்றுகளை சுவர்ந்தாய்வு செய்து, விண்ணப்பதார்களின் விவரங்களை இணைப்பிலுள்ள Google Sheet படிவத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் பள்ளிக் கல்வி ஆணையரகத்திற்கு அளிக்க வேண்டிய நாள். | 06.07.2022 மாலை 8 மணிக்குள் |

iv. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை மின்னஞ்சல் வாயிலாக தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிட ஏதுவாக சம்மந்தப்பட்ட அலுவலர்களின் மின்னஞ்சல் முகவரியினை செய்திக் குறிப்பில் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

3. <u>கல்வித் தகுதி</u>

**இடைநிலை ஆசிரியர்** பதவிக்கு அரசாணை (நிலை) எண்.12, பள்ளிக் கல்வித் (தொ.க.1(1)) துறை நாள் 30.01.2020–ன்படி வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் (ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் I தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்).

**பட்டதாரி ஆசிரியர்** பதவிக்கு அரசாணை (நிலை) எண்.13, பள்ளிக் கல்வித் (ப.க.3(1)) துறை நாள் 30.01.2020–ன்படி வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் (ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் II தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்).

**முதுகலை ஆசிரியர்** பதவிக்கு அரசாணை (நிலை) எண்.14, பள்ளிக் கல்வித் (ப.க.2(1)) துறை நாள் 30.01.2020–ன்படி வரையறுக்கப்பட்டுள்ள கல்வித் தகுதிகள் .

4. <u>முன்னுரிமை</u>

ஒரு காலிப்பணியிடத்திற்கு ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பிக்கும் போது பின்வரும் முன்னுரிமைப்படி பரிசீலிக்க வேண்டும்.

<u>இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர்</u>

அ) i) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகளுடன் ஆசிரியர் தகுதித் தேர்விலும் தேர்ச்சி பெற்று இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தில் தன்னார்வலர்களாக பணிபுரிந்து வருபவர்கள். (இல்லையெனில்)

ii) வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகளுடன் ஆசிரியர் தகுதித் தேர்விலும் தேர்ச்சி பெற்றவர்கள்

<u>முதுகலை ஆசிரியர்கள்</u>

iii) முதுகலை ஆசிரியர்கள் தெரிவுக்கான ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நடத்தப்பட்ட தேர்வுகளில் பங்கேற்று சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொண்டவர்கள்.

ஆ) i) பள்ளி அமைந்துள்ள ஊராட்சி எல்லைக்குள் வசிப்பவர்கள்,
(இல்லையெனில்)

ii) பள்ளி அமைவிட ஒன்றிய எல்லைக்குள் வசிப்பவர்கள்
(இல்லையெனில்)

iii) மாவட்ட எல்லைக்குள் வசிப்பவர்கள்
(இல்லையெனில்)

iv) அருகாமை மாவட்டத்தில் வசிப்பவர்கள்.

5. மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பதாரர்களது, விண்ணப்பங்கள் மற்றும் கல்விச் சான்றுகளை சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் / உதவி தலைமை ஆசிரியர் அல்லது மூத்த ஆசிரியரைக் கொண்ட குழு சரிபார்த்து, தகுதியானவர்களை வகுப்பறையில் மாணவர்களுக்கு பாடம் நடத்த (Demo Class) அறிவுறுத்தி, அதனடிப்படையிலும் அவர்களது திறனை அறிய வேண்டும். தொடக்கக் கல்வித் துறையை பொறுத்தமட்டில் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் / குறுவள மைய / வட்டார வள மைய மேற்பார்வையாளர் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழு மேற்சொன்ன வழிமுறைகளின்படி தற்காலிக ஆசிரியர்களை தெரிவு செய்யும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள் குறித்த விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பள்ளி வாரியாகவும் / பதவி வாரியாகவும்/ பாட வாரியாகவும் தயார் செய்து தேர்வு குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் கையொப்பத்துடன் தீர்மானம் நிறைவேற்றி தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலரும், உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு தொடர்புடைய முதன்மைக் கல்வி அலுவலரும் ஏற்பளிப்பு செய்ய வேண்டும்.

6. தற்காலிகமாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு தனியே வருகைப் பதிவேடு மற்றும் மதிப்பூதியம் வழங்கப்பட்டதற்கான பற்றொப்பப் பதிவேடு மட்டும் பேனப்பட வேண்டும்.

7. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தற்காலிக ஆசிரியர் தேர்வு குறித்த விவரங்களை பள்ளி வாரியாகவும் / பதவி வாரியாகவும் / பாடவாரியாகவும் தயார் செய்து பத்தி 5–ல் தெரிவித்துள்ளவாறு தேர்வுக் குழு உறுப்பினர்களின் கையொப்பத்துடன், பள்ளி மேலாண்மைக் குழு தலைவரின் ஒப்புதலையும் பெற்று சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் /

வட்டாரக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகக் கோப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

8. பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்ட கல்வித் தகுதிகள் அல்லாதோர் விண்ணப்பித்தால் அவர்களின் விண்ணப்பங்களையும் பெற்றுக் கொண்டு இணைப்பில் கண்டுள்ள Google Sheet–இல் சார்ந்த விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

9. இந்நியமனமானது முற்றிலும் தற்காலிகம் எனவும், மாறுதல் / முறையான நியமனங்களின் மூலம் காலிப்பணியிடம் பூர்த்தி செய்யப்படும் அன்றே தற்காலிக ஏற்பாட்டின் பேரில் பணியமர்த்தப்பட்டவர் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார். மேலும் அன்னாரது பணி மற்றும் நடத்தை திருப்தி இல்லையெனில் உடனடியாக பணியிலிருந்து விடுவிக்கப்படுவர்.

10. பார்வை 1 முதல் 3 வரை குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளை உள்ளடக்கிய தமிழ்நாடு அரசிதழ் எண்.36, நாள் 30.01.2020–இன் நகலொன்று இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பலாகிறது.

**இணைப்பு** –

1. அரசிதழ் எண்.36, நாள் 30.01.2020–ன் நகல்.
2. Data Capture Format for Temporary Engagement of Teachers in Schools.

பள்ளிக் கல்வி ஆணையருக்காக

**பெறுநர்**

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர்,அரியலூர்,
கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, திருப்பூர்,
கிருஷ்ணகிரி, நீலகிரி, இராணிப்பேட்டை, சேலம், திருப்பத்தூர்,
திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், பெரம்பலூர்,
நாகப்பட்டினம், மயிலாடுதுறை.

**நகல்**

தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.

# செய்திக் குறிப்பு

பள்ளிக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும், ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 2022-23ஆம் கல்வியாண்டில் 01.06.2022 நிலவரப்படி காலியாகவுள்ள இடைநிலை / பட்டதாரி / முதுகலை ஆசிரியர் பணியிடங்களில் தற்காலிக ஆசிரியர் நியமனம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தகுதியான விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் வாயிலாகவோ உரிய கல்வித் தகுதிச் சான்றுகளுடன் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலரிடம் (District Educational officer) சமர்ப்பிக்க வேண்டும்.

இது சார்பான காலிப்பணியிட விவரங்கள் முதன்மைக் கல்வி / மாவட்டக் கல்வி / வட்டாரக் கல்வி அலுவலகங்ககளின் அறிவிப்புப் பலகையில் 02.07.2022 அன்று வெளியிடப்படும்.

விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் 06.07.2022 மாலை 5 மணி ஆகும். குறித்த நேரத்திற்குப் பிறகு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தகவல் பலகையில் வெளியிடப்படும் காலிப் பணியிட விவரங்கள் மாறுதலுக்குட்பட்டது.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி

1. ________ கல்வி மாவட்டம்_________.

2. ________ கல்வி மாவட்டம் _________.

3. ________ கல்வி மாவட்டம் _________.(தேவைக்கேற்றவாறு)

முதன்மைக் கல்வி அலுவலர்